★ பக்கங்கள் 6 விலை சதம் 40

K.R. சிவலோகநாதன் & கோ
லிமிடட்!—
அரிசி ஆலை, கிறைண்டர் இயந்திரங்கள், உதிரிப்பாகங்கள்
ஸ்கூட்டர் உதிரிப்பாகங்கள்
M. E. M ஸ்ராட்டர்கள்
குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
K. R. SIVALOGANATHAN & Co
No: 6 STANLEY Road
JAFFNA
3517

# ஈழநாடு

# The EELANADU

Registered as a Newspaper at the General PostOffice
Sri Lanka Under No QB/8945/78
மலர் 21 ஆவணி 30 ஷவ்வா 22 இதழ் 215
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 15-9-79

Montessori Classes
ENGLISH MEDIUM
Mariane Training Centre
(கொழும்பு—யாழ். இலா)
சனி, ஞாயிறு முழுநேர
வகுப்புகள்
ஆரம்பம் 15-9-79
தொடர்பு:
T. லோகநாதன்
கல்வி போதனா நிலையம்
34, பலாலிவீதி, யாழ்ப்பாணம்.

UNIVERSITY OF SRI LANKA - JAFFNA CAMPUS LIBRARY
RECEIVED
PERIODICALS DIVISION

## பொருளாதார அபிவிருத்திக்கு

# இனமதபேதமற்ற நடவடிக்கை அவசியம்

## வவனியாவில் அமைச்சர் 'லலித் முன்னிலையில் 'சிவா

(வவனியா)

இந்நாட்டின் பொருளாதாரத்தை அபிவிருத்திசெய்வதற்கு, இன, மத பேதங்களுக்கு அப்பாற்பட்ட நிலையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். அன்றேல் எந்த அபிவிருத்தி நடவடிக்கைகளும் பயனற்றதாகிவிடும்.

இவ்வாறு வவனியா எம். பி. திரு தா. சிவசிதம்பரம் வவனியாவில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் பேசுகையில் கூறினார்.

வவனியாவுக்கு உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்ட வர்த்தக அமைச்சர் திரு. அத்துலத் முதலி தலைமையில் வவனியா மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் பேசுகையிலேயே திரு சிவசிதம்பரம் மேற்கண்டவாறு கூறினார்.

### உளுந்துக்கு உத்தரவாத விலை

வவனியாப் பகுதியில் நல்ல விளைவைத்தரும் உளுந்துக்கு உத்தரவாத விலையை அரசு நிர்ணயிக்க வேண்டுமென்றும் இவ்வாறு உத்தரவாத விலை நிர்ணயிக்கும் பட்சத்திலேயே உற்பத்தியாளர்களும் பாவனையாளர்களும் நல்ல பயன் பெறுவாரகளென்றும் திரு. சிவசிதம்பரம் அமைச்சரைக் கேட்டுக்கொண்டார்.

### அமைச்சர் இணக்கம்

[illegible] கோரிக்கையை அமைச்சர் ஏற்றுக்கொண்டு, விரைவில் இது குறித்த நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார் [ஐ]

### வல்வை முதல்வர் கைது?

[வல்வெட்டித்துறை]

வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவர் திரு. சே. ஞானமூர்த்தி கைதுசெய்யப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

திரு ஞானமூர்த்தி முதலில் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் விடுதலை செய்யப்பட்டாரென்றும், பின் சில மணித்தியாலங்களின் பின் மீண்டும் கைது செய்யப்பட்டு, விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டதாகவும் கூறப்படுகிறது. [இ]

### இணுவில் ரயில் நிலையக்கொள்ளை

## அடையாளம் காட்டப்படவில்லை சந்தேகநபர் விடுதலை

(யாழ்ப்பாணம்)

இணுவில் ரயில் நிலையத்தருகில் துப்பாக்கி முனையில் நடந்த கொள்ளைச் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட சந்தேக நபர் விடுதலை செய்யப்பட்டார்.

மல்லாகம் நீதிமன்றத்தில் நடந்த அடையாள அணிவகுப்பில் சந்தேக நபர் அடையாளம் காட்டப்படாததைத் தொடர்ந்து அவர் விடுதலை செய்யப்பட்டார்.

(6-பக்கம் பார்க்க)

## ''பிரிவினை மனப்பான்மையை வேரோடு களையவேண்டும்''

### காரைநகரில் மாவட்ட மந்திரி

(யாழ்ப்பாணம்)

கல்வி முறையில் ஏற்பட்ட மொழி வாரியான போதனை, சிங்களம் பேசும் மக்களையும், தமிழ் பேசும் மக்களையும் ஒருவரிடமிருந்து ஒருவரைப் பிரித்து பயங்கரமான பிரிவினைக் கோரிக்கைக்கு வழிவகுத்துள்ளது.

இவ்வாறு காரைநகரில் அளிக்கப்பட்ட வரவேற்பில் யாழ். மாவட்ட அமைச்சர் திரு யு. பி. விஜயக்கோன் கூறினார்.

அமைச்சர் காரைநகர் நீலிப்பந்தனை ஸ்ரீ துர்க்கை அம்பாள் ஆலயத்தில் நடந்த விசேட ஆராதனையில் கலந்துகொண்டு ஆலயப் பூசகர் பிரம்மஸ்ரீ குமாரசாமி குருக்களிடமிருந்து காளாஞ்சி பெற்றுக்கொண்டார். அமைச்சருடன் வித்தியோதய பல்கலைக் கழகவிரிவுரையாளர் டாக்டர் ஹெக்டர் அழகக்கோனும் வந்திருந்தார்.

நீலிப்பந்தனை மக்களால் அமைச்சருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு வைபவத்திற்கு திரு கே. தர்மராசா தலைமை வகித்தார்.

அமைச்சர் மேலும் பேசுகையில் கூறியதாவது!

பிரிவினை மனப்பான்மையை வேருடன் களைய வேண்டும். மீண்டும் எல்லா இனமக்களும் இலங்கைமாதாவின் புதல்வர்கள், சமத்துவமானவர்கள் ஒருவருக்கொருவர் சளைத்தவர்கள் அல்ல என்றன உறுதியுடன் வாழ வழி செய்யவேண்டும், இந்நிலை ஏற்பட்டால் இலங்கை சர்வதேச அரங்கில் மிகவும் சிறந்ததொரு ஸ்தானத்தை வகிக்கும் என்பதில் ஐயமில்லை.

ஒற்றுமை என்பது சமத்துவம் என்ற அடிப்படையிலே கட்டியெழுப்பப்பட வேண்டும் ஓர் இனத்தின் சுயமரியாதையைப் பாதிக்கின்ற நிலையில் ஒற்றுமையைக் கட்டியெழுப்ப முனைந்தால் அது பகற்கனவாக முடிந்துவிடும். சகல இனமக்களும் இந்நாட்டின் சகல பகுதிகளிலும் சமத்துவத்துடனும் சமசந்தர்ப்ப வாய்ப்புகளுடனும், பரஸ்பர நம்பிக்கையுடனும் அன்புடனும் வாழக்கூடிய நிலைமையை உருவாக்க வேண்டும்.

### யாழ் மக்கள் விடாமுயற்சி உடையவர்கள்

யாழ்ப்பாணத்தில் நான் பெற்ற அனுபவரீதிப்படி யாழ்ப்பாண மக்கள் ஆற்றலும் விடாமுயற்சியும் உடையவர்கள் என்பதை அறியக்கூடியதாக இருக்கின்றது. ஆகவேதான் யாழ்ப்பாண மக்களின் பொருளாதார வளர்ச்சிக்கு சகல துறையிலும் அரசாங்கத்தின் உதவியைப் பெற்றுக்கொடுக்க ஆவன செய்வேன் என்பதை உறுதியுடன் கூறுகிறேன். விவசாயம் மீன்பிடித் தொழில், வர்த்தகம் போன்ற துறைகளில் யாழ்ப்பாணக்குடாநாடு முன்னேற நீங்கள் அனைவரும் உங்களது பரிபூரண ஒத்துழைப்பு நல்க வேண்டும். சுதந்திரம் பெறும் வரை மிகவும் ஐக்கியத்துடன் வாழ்ந்து வந்த சிங்கள தமிழ், முஸ்லீம் மக்களிடையே இன்று மனக்குரோதமும் சந்தேகமும் ஏற்பட்டிருப்பதை நாங்கள் மிகவும் மனவருத்தத்துடன் காண்கின்றோம் இந்த நிலையின் உருவாக்கியவர்கள் அரசியல்வாதிகளும், படித்தவர்கள் என்று தம்மை கருதிக்

(6-ம் பக்கம் பார்க்க)

### படகு விபத்தில் 200 பேர் பலி!

டாக்கா, செப். 14

வங்காள விரிகுடாவில், பங்களாதேஷிற்கு அருகே இடம்பெற்ற படகு விபத்தொன்றில் 200 பேர் வரை பலியாகினரென அறிவிக்கப்பட்டுள்ளது.

பங்களாதேஷின் இரு தீவுகளுக்கிடையே 250 பிரயாணிகளுடன் சென்ற இப் படகு விபத்திற்குள்ளானதையடுத்து 15 பேர் நீந்திக் கரைசேர்ந்தனர் என்றும், 30 பேரை கடலில் சென்ற பிரங்கிப் படகு ஒன்று காப்பாற்றியதாகவும் அறிவிக்கப்பட்டது. [இ]

### ''அத்தியாவசிய பொதுச்சேவைகள்

## சட்டமூலத்தை ஒழிக்க சகல சக்திகளும் முன்வரவேண்டும்''

(கொழும்பு)

''முழுத் தொழிலாளவர்க்கத்திற்குமே கெடுதல் விளைவிக்கக்கூடிய அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்ட மூலத்தை இல்லாது ஒழிக்க சகல சக்திகளும் முன்வரவேண்டும்.''

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் திரு: உபதிஸ்ஸ கமநாயக்கா கூறினார்.

மக்கள் விடுதலை முன்னணியின் சோஷலிசத் தொழிலாளர் சங்கம் ஏற்பாடு செய்திருந்த அத்தியாவசிய பொது சேவைகள் சட்டமூலம் அவசரகாலச் சட்டவிதிகள் ஆகியவற்றிற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் கூட்டத்திலே பேசுகையிலேயே திரு. உபதிஸ்ஸ மேற்கண்டவாறு கூறினார்.

சங்கத் தலைவர் திரு. எச். என். பெர்னாண்டோ தலைமையில் கொழும்பு புதிய நகர மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு உபதிஸ்ஸ கமநாயக்கா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

''இலங்கையில் தொழிலாளர் வர்க்கம் சகல சுதந்திரத்துடன் வாழ வழிவகுக்கப்பட்டிருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர்கள் வெளிநாடுகளில் பவனிவரும்போது கூறி வருகின்றனர் ஆனால் சொல்லுக்கும் செயலுக்கும் மாறாக அவர்கள் செயல்படுவது வேதனைக்குரியது

''தமது ஆட்சிக்காலம் முழுவதும் அவசரகாலச் சட்டவிதிகளின்கீழ் தொழிலாளவர்க்கத்தை நசுக்கிப் பிழிந்த ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினர் இன்று தொழிலாளவர்க்கத்திற்காகப் போராட முன்வந்திருப்பதாக நீலிக்கண்ணீர்வடிக்கின்றனர்.''

மற்றும் பலர் உரையாற்றினர்கள். [கு]

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

EY 5405 இலக்க பேஜோ 203 மேலதிக டியர் பொக்ஸ் செற்றுடன் விற்பனைக்குண்டு. 71/2, கோவில் வீதி, நல்லூர். 3594

யாழ் / வண்ணார்பண்ணை பிரம்படிகுள சந்தியில் ஸ்ரோர் பாவனைக்குகந்த சிறிய கடை உடனடியாக விற்பனைக்குண்டு விபரங்களுக்கு—3/9, பிரம்படிகுள லேன், யாழ்ப்பாணம். 3590

திருநெல்வேலியில் இரண்டு பரப்புக்காணி விற்பனைக்குண்டு நேரில் வரவும். 211, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 3595

### தேவை

மாணவர் ஒருவருக்கு யாழ். நகருக்குள் தங்கி பயில்வதற்கு விடுதி வசதி உடன்தேவை உணவு வசதி இருப்பின் விரும்பத்தக்கது. கடித மூலம் தொடர்புகொள்ளவும்! விளம்பர இல: 3536 C/o ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம். 3536

### வகுப்புகள்

நல்லூர் கோவில் வீதியில் உள்ள 108-ம் இலக்க ஆலயத்தில் பிரதி ஞாயிறு தோறும் மாலை 4-30 தொடக்கம் ஸ்ரீ சாரதா சேவாச்சிரம செயலாளர், 'ஸ்ரீமத் பகவத்கீதை' வகுப்புகள் நடாத்துவார். யாவரும் கலந்துகொள்ளலாம். 3612

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்- இலங்கை
## கேள்வி அறிவித்தல்

இலங்கை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பதில் நிதியாளரினால் கீழே குறிக்கப்பட்டுள்ள சேவைகளுக்காக 1979 செப்தெம்பர் மாதம் 25ஆம் தேதி நண்பகல் 12.00 மணி வரை பொறியிடப்பட்ட கேள்விகள் இணைப்படியில் பெற்றுக்கொள்ளப்படும்.

1 தச்சுவேலை கூரையை மாற்றி அமைத்தல், சேர்த்தல் ஆகிய வற்றிற்கு

ஏதாவதொரு அரசாங்கத் திணைக்களம், கூட்டுத்தாபனம் அல்லது வேறேதாவொரு பல்கலைக்கழகத்திலாவது நிருமாண வேலையைச் செய்வதற்காகப் பதிவுசெய்து 75,000/- ரூபா செலவுக்குக் குறையாத வேலையைக் கடந்த மூன்று ஆண்டுகளில் திருப்திகரமாகப் பூர்த்தியாக்கியமைக்கான சான்றை அளிக்கும் ஒப்பந்தகாரர்களுக்குக் கேள்விப்படிவங்கள் வழங்கப்படும்.

1979 செப்தெம்பர் 24ஆந் தேதிவரை வழக்கமான வேலை நேரங்களில் கேள்விப்படிவங்களின் தொகுதி இணைப்படியில் இலங்கை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பதிற்பதிவாளரின் அலுவலகத்தில் வழங்கப்படும் இதற்கு மீளளிக்கப்படும் வைப்பாக 100/-ரூபாவும் மீளளிக்கப்படாத வைப்பாக 25/- ரூபாவும் செலுத்தப்பட வேண்டும்

வேறு தேவையான விபரங்களை நேரடியாகப் பதிவாளரின் அலுவலகத்தில் வழமையான அலுவலக நேரங்களிற் பெற்றுக்கொள்ளலாம்.

பதிற்பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்-இலங்கை
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்,
10-09-79. 3603

## கட்டைவேலி கிராமச் சபை
## கேள்வி விளம்பரம்

கீழ்க்காணும் வேலைகளுக்கு 1979-ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 27-ந் திகதி காலை 9 மணி வரை கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும். 1979-ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 25-ந் திகதி பிற்பகல் 2-00 மணி வரை கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும். ஏனைய விபரங்களை கந்தோர் நாட்களில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

1. கல்வாய் முத்துமாரி கோவில் திருத்தம்
2. [illegible] தலைகுளம் கோவில்கடவை வீதி திருத்தம்
3. இலைமூலை வதிரித் திட்டம் (நீடித்தல்) வேலை
4. வீரபாண்டியன் வீதி திருத்தம்
5. கிளாலை ஆக்ரஸ்ரேட்டு [illegible]த்தம்.

ஒப்பம்
ஆ. [illegible] நாயகம்,
விசேட ஆணையாளர்,
கட்டைவேலி கிராமசபை

கட்டைவேலி கிராமச்சபை,
கல்வாய்,
79-09-13. 3600

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

## மூடப்பட்ட வங்கிகளை உடன் திறக்கவும்
### அ. லிகிதர்சங்கமகாநாட்டுக்குப்பிரேரணை

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் மூடப்பட்டிருக்கும் வங்கிகளை பொது மக்களின் நன்மை கருதி உடனடியாகத் திறக்கவேண்டும். யாழ்ப்பாணத்தில் பரந்துகிடக்கும் அரசாங்க காரியாலயங்களை ஒரே இடத்தில் இயங்கச் செய்யுமுகமாக ஐந்து மாடிக்கட்டிடம் ஒன்று அமைக்கப்படவேண்டும்.''

இவ்வாறு அரசைக் கோரும் பிரேரணை ஒன்று நேற்று கொழும்பில் நடைபெற்ற அரசாங்க லிகிதர் சேவைச்சங்க ஐம்பத்தொன்பதாவது ஆண்டுப் பிரதிநிதிகள் மகாநாட்டில் யாழ்ப்பாணக் கிளை சார்பில் சமர்ப்பிக்கப்பட்டது.

அரசியல் யாப்பின்பிரகாரம் வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழில் நிர்வாகத்தை நடத்துவதற்குத் தகுந்த நடவடிக்கைகளை உடனடியாக எடுக்கவேண்டும் அங்கு நீதிபரிபாலனத்தை தமிழில் நடாத்தவேண்டுமென்ற பிரேரணைகளும் மகாநாட்டில் கொண்டுவரப்பட்டன.

மேலும் மகாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணைகள் வருமாறு:

அரசின் பரிபாலனத்துறையில் முக்கிய இடம் வகிக்கும் அரசாங்க லிகிதர் சேவைக்கு புதிய [illegible] திட்டம் நடைமுறைப்படுத்தப்படுத்த வேண்டும்.

அரசாங்க லிகிதர்சேவையை இலங்கைநிர்வாகசேவையுடன் ஒன்றிணைக்கவேண்டும்

அரசாங்க சேவையாளர் ஓய்வுபெறுங்காலத்திற் பெறும் ஓய்வூதிய முன்பணம் ரூபா

(6-ம் பக்கம் பார்க்க)

## இன்று சிரமதானம்

(பருத்தித்துறை)

யாழ் வேம்படி மகளிர் உயர்தரக் கல்லூரி மாணவிகள் பருத்தித்துறை ஸ்ரீசாரதா சேவாச்சிரமத்தில் இன்று காலை சிரமதான சேவையில் ஈடுபடவுள்ளனர்.

மேற்படி கல்லூரி அதிபர் செல்வி பவளம் ஆறுமுகம், கல்லூரி விடுதி பொறுப்பாளர் செல்வி குணரட்ணம் ஆகியோர் தலைமையில் மாணவிகள் சிரமதானம் செய்வார்கள்.

## இன்று நடைபெறும் நாட்டுக்கூத்து

(யாழ்ப்பாணம்)

யாழ் நவரசநாட்டுக் கூத்துக் கலாமன்றத்தினர் தயாரித்தளிக்கும் 'எஸ்தாக்கியார்' என்னும் நாடகம் இன்று சனிக்கிழமை இரவு யாழ் சம்பத்திரிசியார் கல்லூரி மைதானத்தில் மகாவித்துவான் கலாநிதி வதியோகுப்பிள்ளை ஆண்டகை தலைமையில் அரங்கேற்றப்படவுள்ளது.

யாழ் ஆனைக்கோட்டையைச் சேர்ந்தகலைஞர்களும், நாவாந்துறை புனித பரலோக மாதா கோவிலைச்சேர்ந்த கலைஞர்களும் ஒன்று சேர்ந்து இந்நாடகத்தில் நடிக்கின்றனர்,

வைத்திய கலாநிதி பிலிப் மேற்படி நாடகத்தில் பங்குபற்றிய நாடகக் கலைஞர்களைக் கௌரவிப்பார். [கெ]

## மேலதிக கல்வி அதிகாரி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மேலதிகப் பதில் கல்வி அதிபதியாக திரு. கே. சிவநாதன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் முன்பு யாழ் பல்கலைக்கழகத்தில் பதில்பதிவாளராகக் கடமையாற்றினார்

யாழ் பிரதம கல்வி அதிகாரியாக முன்பு திருகோணமலையில் கடமையாற்றிய ஜனாப் எம். என். கபூர் நியமிக்கப்பட்டுள்ளார். [க]

## அமரர் நல்லதம்பி

அமரர் நல்லதம்பி கரவெட்டியைச் சேர்ந்த கட்புதா என்னுமிடத்தில் செல்வாக்குடன் திகழ்ந்த பண்டிதர் ஏகாம்பரத்தின் சிரேஷ்ட புதல்வராவர். இவர் ஆசிரியராகிப் பின் மலைநாட்டைச் சேர்ந்த தொலஸ்பாகை என்னும் பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றி ஆண்மையில் இளைப்பாறியிருந்தார்.

இவர் மீசாலை வடக்கை புகுந்த இடமாகக் கொண்டு முப்பது ஆண்டுகளுக்கு மேலாக வாழ்ந்திருந்தார் இவர் சமய பக்தியுள்ள சிறந்த ஆசிரியர். மீசாலை வடக்கு, தொலஸ்பாகே ஆகிய இடங்களில் பல்வேறு சமூக இயக்கங்களில் ஈடுபட்டு அருப்பணியாற்றியுள்ளார் புராணப் படிப்புகளில் அதிக ஈடுபாடுடையவர்.

எவ்வளவு எதிர்ப்புகளையும் சமாளித்து தான் நின்ற நிலை தளம்பாது மக்களை தம் பக்கம் ஈர்க்கும் ஓர் ஆசானாக விளங்கினார்.

தன்னிலும் பார்க்க உயர்ந்தோரை விடத் தாழ்ந்தோரை கூடுதலாக மதிக்கும் தன்மை வாய்ந்த அமரர் நல்லதம்பி பழகுவதற்கு இனியவராக இருந்தார். இவரிடம் கல்வி கற்ற மலைநாட்டு மாணவர்கள் பலர் உயர்ந்த பதவிகளை வகிக்கிறார்கள். இரக்கசிந்தனையும் இன்சொல்லும் இன்முகமும்கொண்ட அமரர் நல்லதம்பி மறைவு வடமராட்சிக்கு மட்டுமல்ல தென்மராட்சி மக்களுக்கும் ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகும்

—ஆசிரியர் அ. ஆறுமுகம்.

## புனித பத்திரிசியார் கல்லூரி
யாழ்ப்பாணம்

க. பொ. த. (உயர் நிலை). வகுப்புக்கு பொருளியல், அளவையியல் ஆகிய பாடங்கள் படிப்பதற்கு பட்டதாரி ஆசிரியர் ஒருவர் தேவை. உடன் விண்ணப்பிக்கவும்.

3598 அதிபர்.

## பிஸ்கால் விற்பனை

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்
செல்லையா தர்மராசா,
காரைநகர் வடக்கு, காரைநகர்.
— வழக்காளி.

எதிர்

வழக்கு இலக்கம்:
எல்/3664.

1. ஆறுமுகம் மார்க்கண்டுவும் பெண்
2. சின்னம்மாவும், இருவரும்
[illegible] காரைநகர் வடக்கு, காரைநகர்.

மேற்சொல்லப்பட்ட எதிராளிகளிடமிருந்து வெலியாத்தில் விபரிக்கப்பட்ட தொகைப் பணம் ரூபா 1800-35 சதம் (இதில் நடைபெற்ற செலவு ரூபா 1476-25 சதமும் நடைபெறவேண்டிய செலவு ரூபா 143-80, சமய சமயச்செலவு ரூபா 80-30 சதமும்) 16-10-78ல் தீர்த்த செலவு ரூபா 100/- மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் செலவு ரூபா 249-75 சதமும் இதில் கொடுபட்ட ரூபா 150/- நீக்கி மீதம் எல்லாமாக ரூபா 2000-10 சதத்திற்கு கீழே விபரிக்கப்படும் ஆதனத்தின் சகல உரித்துக்களையும் 1979ம் ஆண்டு ஐப்பசி மாதம் 10ம் திகதி புதன்கிழமை காலை 10-00 மணிக்கு சொல்லப்பட்ட ஆதனத்தில் இருந்து பகிரங்கஏலத்தில் யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்ற பிஸ்காலால் விற்பனை செய்யப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகிறது. பிஸ்கால் செலவும் பவுண்டேச்சும் அறவாக்கப்படும்.

### ஆதன இடாப்பு

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி, காரைதீவு கோவிற்பற்று, காரைதீவு வடக்கிலுற "ஆலடி" நி. ப. 2, பனைகளும் தென்னைகளும், வீடும் குகினி, கிணறு, எல்லை கிழக்கும் தெற்கும் சிவனருள்பாதம் பெண் சிவாம்பிகையின் ஆதனம், மேற்கு ஆறுமுகம் மார்க்கண்டுவினதும் பெண் சின்னம்மாவினதும் ஆதனம், வடக்கு ஒழுங்கை இதடங்கலும், வடக்கு ஒழுங்கையிலிருந்து பேரொழுங்கைக்குப் போகும் உரித்தும்.

2, ஷ "ஆலடி", நி ப 1, 1/2 எல்லை கிழக்கு ஒழுங்கையும் ஆறுமுகம் மார்க்கண்டுவினதும் பெண் சின்னம்மாவின் ஆதனம். தெற்கு சிவனருள்பாதம் சிவாம்பிகையின் ஆதனம். மேற்கு முருகேசு சரஸ்வதியினுடனம், குமாரசாமி நாகாம்பிகையின் ஆதனமும், வடக்கு ஆறுமுகம் கதிர்காமநாதனுக்கும் உரிய ஆதனம் இதடங்கலும்.

பொ. பாக்கியநாதன்
பிஸ்கால்,
மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

மாவட்டநீதிமன்றம்,
யாழ்ப்பாணம் 13-09-79. 3588

## மாநகரசபை யாழ்ப்பாணம்
## கேள்வி அறிவித்தல்

பின்வரும் அமைப்பு வேலைகளுக்கு 4-10-79-ந் திகதி நண்பகல் 12-00 மணி வரை யாழ்ப்பாண மாநகரசபை ஆணையாளரால் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்

| | | |
|---|---|---|
| வடிகால் | — | நாவாந்துறை கடற்கரை வீதி, நாவாந்துறை கடற்கரை |
| கடைகள் | — | முற்றவெளிச்சந்தை, செங்குந்தா சந்தை |
| அணைச்சுவர் | — | உப்புக்குளம், சுப்பிரமணியம் வீதி, கலட்டி அம்மன் வீதி, பெரியதம்பிரான் வீதி, அத்தியடி புதுவீதி, கோவில் வீதி, அம்பலவாணர் வீதி |
| பாலம் | — | மணியம்தோட்டம் - துண்டி வீதி, முருகமூர்த்தி - லோட்டன் வீதி |
| படிப்பகம் | — | வன்னியசிங்கம் படிப்பகம் |
| ஆசனம் | — | முற்றவெளி பஸ் நிலையம் |
| ஆடுகால் | — | பிறவுண் வீதி 5-ம் ஒழுங்கை - ஆத்தி சூடி வீதி |
| மலகூடம் | — | அரியாலை சனசமூக நிலையம் |
| சிறுவர் விளையாட்டு உபகரணங்களும் மதிற்சுவரும் | — | கொழும்புத்துறை கிழக்கு சனசமூக நிலையம் |

3-10-79-ந் திகதி நண்பகல் 12-00 மணி வரை யாழ்ப்பாண மாநகரசபை மாநகரத்துப் பொறியியலாளரிடமிருந்து பெறக்கூடிய கேள்விப்பத்திரங்களில் கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களை மாநகரசபை மாநகரத்துப் பொறியியலாளரிடம் விண்ணப்பிப்பதன் பேரில் அறிந்துகொள்ளலாம்

க. சிவஞானம்,
மாநகர சபை ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

நகர மண்டபம்,
யாழ்ப்பாணம்,
12-9-79. 3599

## மக்கள் கருத்து

### யாழ் மேயர் கவனிப்பாரா?

யாழ்ப்பாணத்தில் உள்ள பெரிய வீதிகளாகிய பருத்தித் துறை வீதியும், ஆடியபாத வீதியும் சந்திக்கும் நல்லூர் சந்தையில் வீதிக்கு குறுக்கே 15 அடி நீளத்திற்கு 2 அடி அகல, 2 அடி ஆழத்தில் திருத்த வேலைகளுக்கெனக் கிடங்கு வெட்டப்பட்டு இரண்டு மாதங்களாக எந்தவித வேலைகளுமின்றி இருக்கின்றது மழைபெய்தால் இச்சந்தியில் இரண்டு அடி ஆழத்திற்கு நீர் நிற்கின்றது பின்னர் அந்தநீர் வற்ற ஒருவாரம் செல்லும் இதனால் பாடசாலை செல்லும் சீருடை அணிந்தபிள்ளைகளும், மற்றும் பாதசாரிகளும் பலத்த சிரமத்திற்கு உள்ளாகின்றனர் இதனை மேயர் நேரில் வந்து பார்த்தால் நன்கு உணரக் கூடியதாக இருக்கும்.

இதுபற்றி பல தடவைகள் மாநகர சபைக்குப் புகார் செய்தும் இதுவரை எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. தேர்தலுக்கு வாக்குக் கேட்க சந்திக்குச் சந்தி மேடை போட்டு தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களும் வாய்மூடி மௌனிகளாக இருப்பதால் மக்கள் மாநகரசபையின் மீது பலத்த அதிருப்தியும் ஆத்திரமும் கொண்டுள்ளனர்.

எனவே மேயர் உடன் நடவடிக்கை எடுத்து திருத்த வேலைகளை மழைகாலம் ஆரம்பமாகுமுன்பு பூரணப்படுத்தி பாதிக்கப்பட்ட மக்களின் மனதில் நிறைவு ஏற்படுத்துமாறு யாழ் மேயரை கேட்டுக் கொள்கிறேன்.

சோ. புவனேந்திரன்
நல்லூர், யாழ்ப்பாணம்.

ஃ ஃ ஃ

### நடைமுறை சாத்தியமற்ற இ.போ. ச. விதிகள்

வடபிரதேச இ.போ.சபையினர் சிலமாதங்களுக்கு முன்னர் எல்லா போக்குவரத்து பஸ்வண்டிகளிலும் "மகளிர் மாத்திரம்" என்று பச்சைமையால் எழுதியிருந்தனர் ஆனால் நடைமுறையில் எந்த பஸ்வண்டியிலாவது அந்தநிலை உண்டா எனின் இல்லை என்பதே சரியான விடையாகும் இதை எழுதுவதற்கும், அதற்கான மைச்செலவிற்கும் எவ்வளவு கவி போயிருக்குமோ தெரியாது?

இப்போது அந்த எழுத்துக்கள் சில நடமாடத்தொடங்கி "மகளி மாத்திரம்" என்றெல்லாம் காட்சியளிப்பதைக்காண பெரிய பரிதாபமாக இருக்கிறது.

சமீபத்தில் 1-9-79 தொடக்கம் மிதிபலகைப் பிரயாணம் பற்றி விளம்பரங்கள் காணப்பட்டன. எந்த பஸ்வண்டியிலாவது நடைமுறைப்படுத்துவதாகத் தெரியவில்லை. மிதிபலகையில் பிரயாணஞ்செய்வதால் ஏற்படும் ஆபத்துக்களைப் பற்றி நமது மக்களும் சிந்திப்பதாகத் தெரியவில்லை.

1-9-79 தொடக்கம் பஸ்வண்டிகளில் புகைத்தல் பற்றி எல்லா பஸ்வண்டிகளிலும் பிரசுரங்கள் ஒட்டப்பட்டிருந்தன. இவ்வளவு பிரசுரங்களையும் அச்சிட எவ்வளவு செலவு போயிருக்குமோ? ஆனால் புகைப்பவர்கள் தொகைகூடியிருப்பதையே காணக்கூடியதாயிருக்கிறது.

இதனையெல்லாம் கவனிக்க வேண்டியவர் பஸ்வண்டிக் கண்டக்டர் (செலுத்துநர்) எனக்கூறப்படுகிறது கண்டக்டர் என்ன செய்வார்?- பிரயாணச்சீட்டு எழுதவும் கொடுக்கவும் மிச்சறைதேடிக் கொடுக்கவுமே படாதபாடுபடுவர். இந்த மிதிபலகையில் நிற்பவர்களையும், புகைப்பவர்களை யும் எங்கே காண்பது? அன்றியும் அவர் ஏதாவது நடவடிக்கை எடுக்க முற்பட்டால் விளைவுதோந்தரவுகளும் ஏற்படஇடமாகிறது.

எனவே போக்குவரத்து சபையினர் விதிகளை நடைமுறைப்படுத்தும்முறைகளையும் கையாளவேண்டிய வழிவகைகளையும் செயற்படுத்தவேண்டும். இதனால் மக்களுக்கும், பிரயாணிகளுக்கும் நன்மை ஏற்படஇடமுண்டு.

நா. சோதிலிங்கம்
செபஸ்தியார் வீதி,
கொண்டாவில்

# யாழ். குடாநாட்டு நீர்நிலை அபிவிருத்திக்கு அதிகாரசபை

## நிறுவுமாறு கருத்தரங்கில் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

"யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள உப்பாறு, தொண்டமானாறு, வழுக்கையாறு என்பவற்றையும் அபிவிருத்தி செய்யப்பட்ட, அபிவிருத்திச் செய்யப்படாத குளங்கள் ஆகியவற்றையும் நிறுவும் அதிகாரசபை ஒன்று நிறுவப்படவேண்டும். இச்சபையில் விவசாயப் பகுதியினர், மின்பிடித் திணைக்களத்தினர், திட்டமிடற் பிரிவினர், ஆராய்ச்சி அறிஞர்கள் முதலிய அனைவரும் இடம் பெறவேண்டும். மகாவலித் திட்டச்சபைபோல அல்லது பெரிய கொழும்புத் திட்டம் போல இது அமையவேண்டும் இவ்வாறு ஒன்றிணைந்த பூரண அதிகாரம் கொண்ட அதிகாரச்சபை மூலந்தான் குடாநாட்டின் பல்துறைப் பொருளாதார அபிவிருத்தி சாத்தியமாகும்."

இவ்வாறு தொண்டைமானாற்றுக் கடனீரேரியில் 1963 முதல் 1973 வரை 40 ஆண்டுகள் தொடர்ந்த மேற்கொள்ளப்பட்ட நீர்-உயிரியல் ஆய்வுகளை ஏரியின் இன்றைய சூழ்நிலையோடு ஒப்பிட்டு இறுதி அறிக்கையைத் தயாரிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட ஆய்வு கருத்தரங்கில் உரையாற்றிய தொண்டைமானாறுவெளிக்கள நிலையத் துணைத் தலைவரும் பாடவிதான அபிவிருத்தி நிலையக் கல்வி அலுவலரும் தொண்டைமானாற்று கடனீரேரியில் நீர உயிரியில் உயிரியல் ஆய்வை மேற்கொண்ட முன்னோடிகளில் ஒருவருமான திரு மூ அற்புதநாதன் உரையாற்றும் போது கூறினார்.

வெளிக்கள நிலையத் தலைவரும் மேற்படி நிலைய நெறியாளருமான திரு. கே. எஸ். குமாரசன் தலைமையில் கருத்தரங்கு நடைபெற்றது வடமாநிலக் கல்விப் பணிப்பாளரும் வெளிக்கள நிலையக் காப்பாளருமான திரு தி. மாணிக்கவாசகர், பாடவிதான அபிவிருத்தி நிலையக் கல்விப் பணிப்பாளர் திரு. டபிள்யூ. எஸ் பெரேரா ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்.

நிலைய முன்னோடிகளில் ஒருவரான திரு கே. சிவபாதசுந்தரம் இறுதி அறிக்கையைச்சமர்ப்பித்தார். உடுப்பிட்டி மகளிர், உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் மாஜனு, கரைநதி ம. ம. வி, சுண்டிக்குளி மகளிர், சென் யோன்ஸ், சாட்லி, நெல்லியடி ம. ம. வி, என்றியரசர் கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்களும் ஆசிரியர்களும் நிலைய ஆய்வாளர்களுக்குஉதவினர் பேராசிரியர் லூதர் ஜெயசிங்கம், யாழ் நீர்வளச் சபைப் பொறுப்பதிகாரி திரு எஸ் குணசேகரம், மீன்பிடித் திணைக்கள ஆய்வாளர் திரு. எஸ். சாம்பசிவம் ஆகியோர் குழுக் கலந்துரையாடல்களில் கலந்து கருத்துரை வழங்கினர். பருத்தித்துறை பாராளுமன்ற உறுப்பினர் திரு. க. துரைரத்தினம் கலந்துரையாடலிற் கலந்து கொண்டார். (கெ-அ)

### இசைவிழா இன்று

(யாழ்ப்பாணம்)

இலங்கை இளங்கலைஞர்மன்றத்தின் 8-வது ஆண்டு இசைவிழாவின் மூன்றுநாள் நிகழ்ச்சிகள் இன்று நடைபெறும்.

யாழ். திவ்ய ஜீவனசங்க மண்டபத்தில் நடைபெறும் இவ்விழாவின் இன்றைய நிகழ்ச்சிகள் வருமாறு:

4-00மணிக்கு-மங்கள இசை, 5 மணி சிவபாலன்-பாட்டு, செல்வி கலாவதி சதாசிவம்-வயலின், து இராஜன்-மிருதங்கம், 5-40 செல்வி கௌரி கலாயநாதக்குருக்கள், வத்சலா சோமசுந்தரக்குருக்கள்-வீணை, எம் சிதம்பரநாதன்-மிருதங்கம், 6 மணி- செல்வி உமா சோமசுந்தரம்-வீணை, து. இராஜன்-மிருதங்கம்.

6-40க்கு யாழ் மாநகரசபை முதல்வர் திரு இராஜா விசுவநாதனுக்கும் சகல மாநகர உறுப்பினர்களுக்கும் மன்றத்தின் சார்பில் வரவேற்புவிழா நடைபெறும் இவ்விழாவிற்கு நல்லூர் எம் பி திரு எம் சிவசிதம்பரம் தலைமை வகிப்பார்.

7-30க்கு திருமதி நாகேஸ்வரி பிரமானந்தா- பாட்டு, செல்வி பாக்கியலட்சுமி நடராஜா-வயலின், ஏ சந்தானகிருஷ்ணன்- மிருதங்கம், 8-30க்கு- செல்வி மீனுகுமாரி இராமநாதன். லதாங்கிஇராமநாதன்- வயலின், ஏ எஸ் இராமநாதன், மிருதங்கம், செல்வி ராஜி இராமநாதன்-கடம், 9-10க்கு செல்வி சிவதாரிணி சிவஞானம் - வீணை, ஏ எஸ் இராமநாதன்-மிருதங்கம், 9-40க்கு திருமதி பூமணி இராஜரட்ணம்-பாட்டு, சோ. சித்திவிநாயகம்-வயலின், பகீரதராசா-மிருதங்கம். (த)

### இன்று

## நீர்வை பரலோகமாதா ஆலய வைரவிழா

கல்வி வளர்ச்சியிலும் தொழில் வளத்திலும், கலைவளத்திலும் நிலவளத்திலும் சிறப்புற்று விளங்கும் நீர்வேலிக் கிராமத்திலே இற்றைக்கு எழுபத்தைந்து ஆண்டுகளாக அருள்மழை பொழிந்து வரும் அன்னை பரலோக நாயகி ஆலயத்தின் 75வது ஆண்டு நிறைவுவிழாவை அக்கிராமத்து மக்கள் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்கள். வைரவிழாவின் நினைவுச் சின்னமாக ஆலயத்தின் முகப்பு மண்டபம் கட்டப்பட்டுள்ளது.

இவ்வாலயத்தின் வரலாறு யாழ் மறை மாவட்டத்தின் இரண்டாவது ஆயரான யூலன் ஆண்டகையின் காலத்திலேயே ஆரம்பமானது. அருட்திரு அந்தோனி செபஸ்ரியன் அடிகளால் 1898ம் 99ம் ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்டது, மறைபரப்புப்பணி ஒன்றையே

- முல்லைக்கவி -

தன் குறிக்கோளாகக்கொண்டவர் கால்நடையாகவும், கட்டைவண்டி மூலமாகவும் கிராமம் கிராமமாகச் சென்று தொண்டாற்றியபோதே இவ்வாலயத்தையும் உருவாக்கினார்.

1899ம் ஆண்டு குசுமியில் பங்குக்கு மாற்றப்பட்ட இவரது பொறுப்பை அருட்திரு ஹிப்போலிற் ஜோசப் அடிகளார் ஏற்றுக்கொண்டார். இவர் இப் பங்கில் கடமையாற்றிய 1899—1904 வரை உள்ள காலகட்டம் மிக சோதனைமிக்கதாகும். இதற்குக் காரணம் இவர் ஆற்றிய அளப்பரிய மறைத் தொண்டாகும். 1901ம் ஆண்டு ஆகஸ்ட் 9ம் நாள் 64 பேர் கத்தோலிக்கராக மதம் மாறினர். இம்மாற்றம் சிலருக்கு ஆத்திரத்தையும் ஆவேசத்தையும் ஏற்படுத்தியது இதன் விளைவு ஓலைக்குடிசையாக இருந்த ஆலயம் எரியூட்டப்பட்டது. திருப்பொருட்கள் சிதைக்கப்பட்டன. ஆனால் இந்தநிலை நீடிக்கவில்லை. பொறுமையையும் அன்பையும் தன் ஆயுதமாகக்கொண்டு பணியாற்றிய யூலன் ஆண்டகையும், ஹிப்பொலிற் அடிகளாரும் பிரச்னைகள் அனைத்திற்கும் சமரசத்தீர்வுகண்டனர்.

அதன் பலன் பிரச்னைக்கு காரணமாக நின்ற சிலரே ஆலயத்தை மீளவும் 1904 ஜனவரி 23ல் கல்லால் கட்டி எழுப்பும் ஆரம்ப வைபவத்திற்கு கைத்தரியம் அளித்தனரென்றால் இது அருட்தெய்வம் பரலோக அன்னையின் அற்புதமே.

1904ல் அருட்திரு ஹிப்பொலிற் அடிகளாரின் மாற்றத்தைபடுத்து இத் நிர்வாகம் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசியாரிடம் ஒப்படைக்கப்பட்டது. இவர் தொடர்ந்து 42 வருடங்கள் தனது உத்விக்குழுக்களுடன் அளப்பரிய மறைத் தொண்டாற்றினர். 1947ம் ஆண்டு ஜனவரி 22ம் நாள் இறைவனடி சேரும் வரைக்கும் தன் இதயபூர்வமான பணியை வழங்கினார். இவரைத் தொடர்ந்து இவ்ஆலயத்திலும், இதனைச் சேர்ந்த மக்களுக்காகவும் தந்தன்னலமற்ற பணியை அளித்த அருட்தந்தையவர்கள் பிலிப்பு, சூசைநாதர், சுவாம்பிள்ளை, மரியதாஸ், ஸ்ரனிஸ்லாஸ், கருணாகரன், குருஸ், மரியசம்பிள்ளை, மதுரநாயகம், ஐயாத்துரை, அந்தோனிப்பிள்ளை, பிரான்சிஸ்குலாஸ், அன்ரன், பிரான்சிஸ், ஜெலான் ஸ்பம்பத்தி, சூசைப்பிள்ளை, ஜோசப், பெனுட், சவிரிமுத்து, ஜெயசேகரம், இந்நாளில் பிலிப்பும் பின்னை யாவருக்கும் பங்குமக்கள் தம்நன்றிக்கடனைத் தெரிவிக்கின்றனர்.

இவ்வாலயத்தின் ஆண்டு விழாவின்போது நாட்டுக்கூத்து அரங்கேற்றப்படுவது வழக்கம். இந்த ஆண்டும் வைரவிழாவை யொட்டி இன்று கலைநிகழ்ச்சிகளுடன் "செனபோல்" நாட்டுக்கூத்தும் அரங்கேற்றப்படுகிறது. இதனை நெறிப்படுத்துபவர் நீர்வேலியைச் சேர்ந்த அண்ணாவியார் ஞா. அந்தோனிப்பிள்ளையாவார்.

## நாடும் நடப்பும்

ஒரு நண்பர் எழுதிய குறிப்பு இது நீங்களும் ரசிப்பதற்குத் தருகிறேன்.

கிரிக்கட் நேர்முகவர்ணனையை வானொலியில் மீண்டும் இப்போது தமிழில் கேட்க முடிகிறது.

நீண்ட நாட்களுக்குப் பின்னரே எமக்கெல்லாம் இந்த வாய்ப்புக்கிட்டியுள்ளது.

சென்னையில் கடந்த செவ்வாயன்று ஆரம்பமாகிய அவுஸ்திரேலிய-இந்திய முதலாவது டெஸ்டின் நேர்முகவர்ணனையையே திருச்சி, சென்னை, பாண்டிச்சேரி வானொலி நிலையங்கள் ஒலிபரப்புகின்றன.

வர்ணனையாளர்கள் சிறந்த பல தமிழ் சொற்களையும் பாவித்து மிகவும்கவர்ச்சியாகவும் சுவாரஸ்யமாகவும் எளிதில் விளங்கக் கூடியதாகவும் வர்ணனையை நிகழ்த்திவருகிறார்கள் அவ்வப்போது ஹாஸ்ய முத்திரைகளுக்கும் குறைவில்லை.

இந்திய வானொலியே கடந்த ஆண்டிலும் கிரிக்கட் டெஸ்ட் ஒன்றிலும் மாநில கிரிக்கட் போட்டி ஒன்றிலும் தமிழில் நேர்முகவர்ணனையை ஒலிபரப்பியது.

இப்போது மீண்டும் ஒலிபரப்பப்படும் நேர்முகவர்ணனையில் முன்னேற்றம் காணப்பட்டபோதிலும் ஆங்கிலப் பதங்கள் பிரயோகிப்பது சில சமயங்களில் தவிர்க்கமுடியாமற் போய்விடுகிறது போலும். எனினும் ஆங்கிலச் சொற்கள் அருமையாக சலிப்புத்தட்டாத விதத்தில் பிரயோகிக்கப்படுகிறது

இந்திய வானொலியின் இந்த முயற்சியைப் பாராட்டாதவர்கள் இல்லை என்றே கூறலாம்.

சென்னையில் கிரிக்கட் ஆட்டங்கள் நடைபெறும்போது மட்டுமே தமிழில் நேர்முகவர்ணனையைக் கேட்கக்கூடிய வாய்ப்பு ஏற்படுகிறது.

தமிழில் வர்ணனையைக் கேட்கும்போது சில சமயங்களில் சலிப்புத் தட்டியதும் தாம் ஆங்கில நேர்முகவர்ணனைக்கு வானொலியைத்திருப்புவதாகவும் மறு நிமிடமே ஏதோ ஒருவித உந்தலினால் தமிழ் வர்ணனைக்காக மீண்டும் வானொலியைத் திருப்பிவிடுவதாகவும் கிரிக்கட் ரசிகர் ஒருவர் கூறினார்.

இந்திய வானொலியில் தமிழில் நேர்முக வர்ணனை ஒலிபரப்பப்படும்போது இலங்கை வானொலியில் இது சாத்தியமாகாதா என்கிறார் இன்னொரு ரசிகர்.

இலங்கையிலும் பிரபல பாடசாலைகளினதும் வெளிநாட்டுக் கோஷ்டிகளினதும் கிரிக்கட் ஆட்டங்கள் நடைபெறும்போது பெரிய வர்த்தக ஸ்தாபனங்கள் முன்வந்து இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத் தாபனத்திற்கு தேவையான நிதியை வழங்க முன்வந்தால் ஏன் இது சாத்தியமாகாது என்கிறார் மற்றும் ஒருவர்.

-ஊர்சுற்றி

### பாப்பரசர் இலங்கை வருவார்?

(உடுப்பிட்டி)

பரிசுத்த பாப்பரசர் இரண்டாம் அருளப்பசின்னப்பர் இவ்வருட இறுதியில் இலங்கைக்கு விஜயம் செய்யவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாப்பரசரை இலங்கைக்கு வருகை தரும்படி இலங்கைக் கத்தோலிக்க மேற்றிராணிமார் சங்கத் தலைவரும், காலி ஆயருமான அதி. வந். அன்ரனி டி சேரம் அழைப்பு விடுத்திருந்தார்.

மறைந்த பாப்பரசர் 6-ம் சின்னப்பரும் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

"இந்திரா காங்கிரஸ், ஜனதா 'எஸ்' கட்சிகளுடன்

# தமிழ்நாட்டில் ஜனதா தேர்தல் உடன்பாடு செய்யாது'

சென்னை, செப். 14

ஜனதாகட்சி தமிழ்நாட்டில் இந்திரா காங்கிரஸ், 'ஜனதா-எஸ்' கட்சிகளைத் தவிர வேறு எந்தக்கட்சிகளுடனும் தேர்தல் உடன்பாடு செய்துகொள்ளும் என்று முன்னாள் மத்தியமின்துறை அமைச்சர் திரு. பா. இராமச்சந்திரன் தெரிவித்தார்.

தமிழ்நாடு ஜனதாகட்சியின் செயற்குழுக்கூட்டம் கோயம்புத்தூரில் நடைபெற்ற பின்னர் பத்திரிகை நிருபர்கள் மத்தியில் பேசுகையிலேயே திரு இராமச்சந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் பேசுகையில் "ஜனதாகட்சியின் மாநிலத் தலைவர் திரு பி லக்ஷ்மணன் தமிழ்நாடு சட்டசபையின் ஜனதாகட்சித் தலைவர் திரு ஜேம்ஸ் ஆகியோரை-கொண்ட கமிட்டி ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் மேலிடத்தோடு தொடர்புகொண்டு இந்தக்கமிட்டியே தேர்தல் விடயங்களைக் கவனிக்குமென்றும் கூறினர். (ரு)

## "தராதரப்பத்திர ஆசிரியர்களுக்கு போதிய சம்பள உயர்வுவேண்டும்"

(யாழ்ப்பாணம்)

தராதரப்பத்திர ஆசிரியர்களுக்கு போதிய சம்பள ஏற்றம், பதவி உயர்வு வழங்குவது பற்றி ஆராயவேண்டும் என்று வேதனமீள் நோக்கு குழுவிற்கு சாட்சியமளிக்கையில் இலங்கை ஆசிரியர் சேவைச்சங்க குழுவினர் தெரிவித்தனர்.

சங்கச் செயலாளர் திரு இ. சுப்பிரமணியம் தலைமையில் சென்ற இக்குழுவினர் கீழ் வரும் கோரிக்கைகளைச் சமர்ப்பித்தனர்.

5-ம், 6-ம் தர ஆசிரியர்களின் வேறுபாட்டை நீக்கி ஒன்றாக்குதல் வேண்டும். ஓய்வூதியத்திற்கும் தோட்டப் பாடசாலைகளின் கடந்தகால சேவையையும் ஓரளவு சேர்த்து வழங்கவேண்டும்.

சுவீகரிக்கப்பட்ட தோட்டப் பாடசாலைகளில் க. பொ. த. சாதாரண சித்தி இல்லாதவர்களுக்கு நியாயமான வேதனமாக 250 ரூபா அலவன்ஸ் வழங்கவேண்டும். தற்போது அலவன்ஸ் வழங்கப்படுவதில்லையெனச் சுட்டிக்காட்டப்பட்டது. (ரு)

## சுவீப் முடிவுகள்

(கொழும்பு)

கடந்த 12-9-79 கொழும்பில் இழுக்கப்பட்ட 739-வது சீட்டிழுப்பில் பரிசு பெறும் டிக்கட்டுகள் விபரம் வருமாறு:

முதலாம் பரிசு

23 H 0678

ரூ. 1,00,000

இரண்டாம் பரிசு

17 H 0538

ரூ. 40,000

மூன்றாம் பரிசு

03 N 0296

ரூ. 10,000

தலா ரூபா 968-70 கொண்ட 100 ஆறுதல் பரிசுகள்.

| | |
|---|---|
| 01 A 0013 | 01 A 0281 |
| 04 A 0428 | 07 A 0407 |
| 14 A 0969 | 22 A 0090 |
| 29 A 0567 | 04 B 0456 |
| 12 B 0268 | 21 B 0539 |
| 01 C 0434 | 11 C 0049 |
| 21 C 0500 | 03 D 0176 |
| 08 D 0594 | 11 D 0522 |
| 13 D 0828 | 16 D 0223 |
| 23 D 0549 | 24 D 0264 |
| 25 D 0048 | 09 E 0920 |
| 16 E 0020 | 22 E 0948 |
| 23 E 0559 | 24 E 0586 |
| 16 F 0005 | 28 F 0320 |
| 04 G 0451 | 05 G 0201 |
| 04 H 0609 | 10 H 0424 |
| 07 J 0207 | 12 J 0231 |
| 13 J 0660 | 04 L 0360 |
| 06 L 0924 | 08 L 0029 |
| 10 L 0446 | 12 L 0634 |
| 23 L 0534 | 23 L 0502 |
| 09 M 0345 | 11 M 0914 |
| 14 M 0117 | 20 M 0810 |
| 03 N 0263 | 06 N 0898 |
| 14 N 0939 | 18 N 0573 |
| 19 N 0438 | 20 N 0531 |
| 21 N 0[illegible]37 | 07 O 0578 |
| 09 O 0004 | 23 O 0304 |
| 28 O 0464 | 03 P 0868 |
| 08 P 0989 | 13 P 0924 |
| 21 P 0227 | 02 Q 0424 |
| 11 Q 0787 | 23 Q 0838 |
| 24 R 0478 | 24 R 0732 |
| 31 R 0998 | 11 S 0789 |
| 14 S 0146 | 16 S 0658 |
| 22 S 0276 | 05 T 0231 |
| 07 T 0569 | 11 T 0374 |
| 12 T 0316 | 17 T 0522 |
| 21 T 0715 | 30 T 0592 |
| 31 T 0071 | 03 U 0261 |
| 11 U 0781 | 17 U 0569 |
| 23 U 0041 | 03 V 0659 |
| 21 V 0411 | 01 W 0434 |
| 07 W 0661 | 09 W 0993 |
| 10 W 0773 | 16 W 0379 |
| 18 W 0873 | 24 W 0986 |
| 02 X 0700 | 03 X 0157 |
| 08 X 0504 | 20 X 0399 |
| 05 Y 0568 | 14 Y 0119 |
| 32 Y 0171 | 04 Z 0671 |

[இவையாவும் உறுதிப்படுத்தப்படவேண்டும்]

## இன்றைய பலன்

ஆவணிமாதம் 30ம் திகதி சனிக்கிழமை [15-9-1979]

மேடம்: செலவுக்கு வேண்டிய பணம் தாராளமாகக் கிடைக்கும். விருந்துபசாரங்களில் அதிக உற்சாகம் காட்டுவீர்கள். புதுமனை கட்டுவதற்கும் எண்ணம் பிறக்கும். சிறப்பான தினம்.

இடபம்: இன்று எதிலும் நிச்சயமற்ற நிலை தென்படும். மனதில் விரக்தி தலைதூக்கும். வேண்டாத விளைவுகள் ஏற்படும். மனஅடக்கம் நன்று.

மிதுனம்: இனபந்துக்கள் மத்தியில் பூசல்கள் தோன்றும். மனக்குமைச்சலினால் வேதனைப்படுவீர்கள். [illegible] விஷ பயத்திற்கும் இடமுண்டு. தெய்வநம்பிக்கை வேண்டும்.

கடகம்: நலம்தரும் சம்பவங்கள் இடம்பெறும். [illegible] சொல்லாமல் பறக்கும். இல்லறத்தில் இனிமை பிறக்கும். சுபமான தினம்.

சிங்கம்: ஏக்கத்தின்சாயல் நிழல்போலத் தொடரும். இலர் வாழ்க்கையில் பிரிவுத்துயர் வேதனையைத் தரும். ஆத்திர உணர்ச்சியை அடக்கவும்.

கன்னி: அறிவுப்பசிக்கு இன்று தாராளமாக விருந்து கிடைக்கும். ஆராய்ச்சியில்

[5-ம் பக்கம் பார்க்க]



# கட்பெறீஸ் போண்விற்றுப்போட்டியில் ஒவ்வொரு மாதமும் 4 பரிசுகள் வெல்லுங்கள்



சொப்பர் சைக்கிள்




ஒவ்வொரு விடையுடனும் உள்ளேயுள்ள இந்த தகரத்தகடு அனுப்பப்பட வேண்டும்.




ரீவீ செற்



சுய இயக்க றைஸ் குக்கர்



தையல் மெஷின்

இவை நாலும் இம் மாதம் உங்களுக்குக் கிடைக்கலாம். கட்பெறீஸ் போண்விற்ற சுவைமிக்க, சொக்லேற் உணவுப் பானம். இதில் பால், கொக்கோ, முட்டை, குளுக்கோஸ், மோல்ற் ஆகியன உண்டு. சூடாகவோ, குளிராகவோ நாளுக்கு இரண்டு தடவை உட்கொண்டால், நாள் முழுவதுமே திடகாத்திரத்துடனிருக்கலாம்; குடும்பத்திலுள்ள அனைவருக்கு மேற்றது.

அத்துடன், ஒவ்வொரு ரின்னும் உங்களுக்கு ஒவ்வொரு மாதமும் நாலு பரிசுகள் வெல்ல சந்தர்ப்பமளிக்கிறது.

விதிகள்

எத்தனை விடைகளும் அனுப்பலாம் ஆனால் ஒவ்வொன்றுடனும் கட்பெறீஸ் போண்விற்று ரின் உள்ளே இருக்கும் தகடு இணைக்கப்படவேண்டும்.

மாதம் முழுவதும் கிடைக்கும் விடைகள் ஒன்று சேர்க்கப்பட்டு, அடுத்த மாதம் முதலாவது வேலை நாளன்று அதிஷ்ட இழுப்பில் திறக்கப்படும் முதலாவது சரியான விடைக்கு பரிசு வழங்கப்படும்.

பரிசிழுப்பின் பின்னர் 7 நாட்களுக்குள் பரிசு பெறுபவரின் பெயர் பத்திரிகைகளில் வெளியிடப்படும்.

டெல்மேஜ் ஃபோர்சைத் அன்ட் கோ. லி., கறட்ஸ் அட்வேற்றைசிங் ஆகிய தாபனங்களில் வேலைபார்ப்பவர்களும், அவர்களது குடும்பத்தினரும் இப்போட்டியிற் கலந்து கொள்ளமுடியாது.

நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது. இது சம்பந்தமாகக் கடிதப்போக்குவரத்து நடத்தபடவோ, விசாரணைகள் ஏற்றுக் கொள்ளபடவோ மாட்டாது.

போட்டி: இடது கோடியிலுள்ள எழுத்துக்களை மாற்றி எழுதினல் சுவைமிக்க உணவுப்பானமொன்றின் பெயர் வரும். வலது பக்கத்திலுள்ள அடைப்புகளில் அதனை எழுதவும்

| வி | போ | ரு | ற் | ண் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

எனக்குப் பரிசு கிடைத்தால், நான் விரும்புவது:

பெயர்: ______

விலாசம்: ______

திகதி ______

இக் கூப்பனை உள்ளேயுள்ள தகட்டுடன் அனுப்ப வேண்டிய விலாசம்:
கட்பெறீஸ் போண்விற்று போட்டி,
த. பெ. எண். 45, கொழும்பு.

S 220

## 'வேலைக்குத்திரும்புங்கள்'

# 365 முதலாளிமாரும் கூலிஉயர்வுக்கு சம்மதம்''

### — முதலியார்

[யாழ்ப்பாணம்]

''சுருட்டுத் தொழிலாளர்களின் வேலைநிறுத்தம் முடிவடைந்துவிட்டதால் சகல தொழிலாளர்களும் உடனடியாக வேலைக்குச் செல்லவேண்டும் என்று தாவடியில் நடைபெற்ற இலங்கைச் சுருட்டுத் தொழிலாளர் சங்க கூட்டத்தில் சங்கத் தலைவர் இ. பொ. வ. மா. க. முதலியார் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது: ''365 தொழிற்சாலைகளின் முதலாளிமார் 1000 சுருட்டுக்கு 37 ரூபா 50 சதம் சம்பளம் வழங்குவதாக துண்டுப் பிரசுரமூலம் செய்தி வெளியிட்டுள்ளது அவர்களின் பெருந்தன்மையை எடுத்துக் காட்டுகிறது.

வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள பன்னிரண்டாயிரத்திற்கு அதிகமான தொழிலாளர்களும் பெருந்தன்மையோடு உடனடியாக வேலைக்குத் திரும்ப வேண்டும். வேலைக்குச் செல்லும் தொழிலாளர்கள் எக்காரணம் கொண்டும் ரூ. 37-50 சதத்திற்குக் குறைவான கூலியைப் பெற்று வேலைசெய்யாதிருத்தல்வேண்டும்.

ஒருசில முதலாளிகள் ஏனைய முதலாளிமார் கணக்குத் தீர்ப்பதுபோல் தாமும் தீர்ப்பதாக தொழிலாளர்களிடம் கூறுவதாக அறிகிறோம்.

சில முதலாளிமார்கள் ஒருநாள் கணக்கை மேற்கூறிய கூலிக்கு சமனாக கூப்பிட்டு தீர்க்க உத்தேசித்துள்ளதாக அறிகிறோம்.

ஆகவே தொழிலாளர் குறைந்தபட்சம் 15 நாட்களுக்கு அல்லது ஒருமாத கணக்கு சேர்ந்தபின் மேற்கூறிய 37-50 வேதனம் பெறவேண்டும் தாம் தவறும்பட்சத்தில் தொழிலாளர்கள் சங்கங்களுடன் தொடர்பு கொள்ளவேண்டும்.

காரியதரிசி திரு க. தம்பிராசா பேசுகையில் தொழிலாளர்கள் தங்கள் சந்தாப்பணங்களை மாதாமாதம் செலுத்தியதால்தான் சங்கம் செயல்படும் இதைதொழிலாளர் அசட்டை செய்யக்கூடாது சங்கங்கள் இல்லாவிடில் இன்று இந்த ரூ. 37-50சதம் கூலி உயர்வை தொழிலாளர்கள் பெறமுடியாது. [செ]

## ''சுருட்டுத் தொழிலாளர்களுக்கு

# வழங்கப்பட்டுள்ள சம்பள உயர்வுபோதுமானதல்ல''

[யாழ்ப்பாணம்]

''வாழ்க்கைச் செலவுகள் உயர்ந்துகொண்டே போகும் இவ்வேளையில் சுருட்டுத்தொழிலாளர்களுக்கு தற்போது வழங்கப்பட்டுள்ள சம்பள உயர்வு போதுமானதல்ல அவற்றையும் குறைத்து வழங்கும் முதலாளிகளிடமிருந்து தொழிலாளர்கள் சம்பளத்தை வாங்கக்கூடாது''

இவ்வாறு அகில இலங்கை சுருட்டுத்தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் மகாநாட்டில் உரையாற்றிய சங்கத்தலைவர் திரு. ஆ. துரைராசசிங்கம் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் ''நாம் இதுவரை உயர்த்திய கூலியை முதலாளிகள் குறைத்திருந்தால் அக்குறைவை முறியடித்து சரியான சம்பளம் வேண்டித்தர எமது சங்கம் தயாராகவிருக்கிறது'' என்றார்.

சுருட்டுத் தொழில் பாதுகாப்பற்ற நிலைமையிலிருப்பதால் சகல குடிசைக்கைத் தொழிலையும் பாதுகாக்க நடவடிக்கை] எடுப்பதுபோல இத்தொழிலையும் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் வெளிநாடுகளுக்கு எமது சுருட்டுகளை சகாயமான முறையில் அனுப்புவதற்கும் ஏற்ற நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமெனக்கைத்தொழில்கிராமிய அமைச்சரைக் கேட்பதெனவும் சுருட்டுத் தொழிலாளர்களின் சம்பளத்தை மாதமிருமுறை வழங்கவேண்டுமெனவும் [சம்பளத்தைச் சட்டமாக்க வேண்டுமென சம்பளநிர்ணய சபையைக் கூட்டவேண்டுமென சம்பளநிர்ணய சபைத் தலைவரையும் கேட்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

பெருந்தொகையான பிரதிநிதிகள் வந்த இக்கூட்டத்தில் எல்லாமுதலாளிகளினதும் சம்பள உயர்வை ஆதரிக்கும் விளம்பரங்கள் வாசிக்கப்பட்டன

பின்னர் திருவாளர்கள் இ. கந்தையா, சந்தசாமி சண்முகம், கிருஷ்ணபிள்ளை சண்முகவடிவேல், ஆ. சந்தையா ஆகியோரும் பேசினார்கள்.

## இன்றைய பலன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆர்வம் பிறக்கும். படித்தவர்கள் ஆதரவுமுண்டு.

**துலாம்:** கன்னல் போல் வாழ்வு கருத்தினில் காதல் மோதும், மின்னல்போல் மறையும் இன்றே, வாட்டிடும் பிணியுமிதாலே.

**விருட்சிகம்:** முன்னேற்றப் பாதையில் தடைகள் பல தாக்கும், இருள்படர்ந்த சம்பவம் ஒன்று மீண்டும் நினைவுக்கு வந்து வேதனைதரும். உடைமையில் கவனம் செலுத்தவும்.

**தனு:** சுகாதாரம் வேண்டும், வெற்றிப்பாதையில் விறுநடை போடுவீர்கள், கலை ரசனைக்கும் இடமுண்டு. காதலர்களுக்கு இனிப்பான தினம்.

**மகரம்:** மயக்கும் மொழிகளால் பணத்தை இழக்க நேரிடலாம், தொல்லைகள் அதிகரிக்கும்; பிரயாணத்தை தவிர்க்கவும், அடக்கம்வேண்டும்.

**கும்பம்:** கவர்ச்சிகரமான தினம் தந்தையின் ஆதரவும் தப்பாமல் கிடைக்கும். பொதுத்துறையில் புகழ் பரவும்; புண்ணிய யாத்திரையும் மேற்கொள்ளப்படும்.

**மீனம்:** இருட்டிட மாற்றத்துக்கான ஆலோசனைகள் இடம்பெறும். பிறரின் கவனம் உங்கள் மீது செலுத்தப்படும், அரசாங்க ஊழியரான்கள் உயர்வுகாணப்படும்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

# ''நிர்வாகச் சீர்கேடு ஏற்பட கல்விமுறையே காரணம்''

### — முன்னாள் அதிபர்கந்தசாமி

[யாழ்ப்பாணம்]

''நாட்டில் சகல துறைகளிலும் ஊழலும், நிர்வாகச் சீர்கேடும் ஏற்பட தற்போது நடைமுறையிலுள்ள கல்விமுறையே காரணம்''

இவ்வாறு பலாலி ஆசிரிய கலாசாலை முன்னாள் அதிபர் திரு. சி. கந்தசாமி, யாழ் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற சமூக பொருளாதார, கல்வி கலை கலாச்சார அபிவிருத்தி பேரவையின் மலர்ச்சி மாநாட்டுக்குத் தலைமைவகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

இலங்கையிலுள்ள 24மாவட்டங்களிலிருந்தும் பெருந்தொகையான பிரதிநிதிகள் இம்மாநாட்டில் கலந்துகொண்டனர்.

திரு கந்தசாமி தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

''கல்வியில் முக்கியமான இடத்தை வகிக்கும் மாணவர்களை நற்பிரஜைகளாக உருவாக்கவேண்டியவர்கள் ஆசிரியர்கள் சமுதாயத்தில் புனிதமான இடத்தை வகிக்கிறார்கள். அவர்களது சமுதாய அந்தஸ்து சமுதாயத்தாலும் அரசாங்கத்தாலும் நன்கு பேணப்படவேண்டும்''

''வகுப்பிலுள்ள மாணவர் தொகை திட்டவட்டமாக வரையறுக்கப்படவேண்டும் மந்தைகளைப் போல் மாணவர்கள் அடைக்கப்பட்ட வகுப்பில் மாணவர்களை ஆசிரியர்கள் தனித்தனியாகக் கவனித்துச் செவ்வனே தம் கடமையைச் செய்ய முடியாதிருக்கிறது.

''இவ்விடத்தில் ''கல்விச் சேவை ஆணைக்குழு'' முதற்கண் கவனம் செலுத்தவேண்டும். அரசாங்கம் கல்விச் சேவையை அடிப்படை அபிவிருத்தி சேவையாகக் கருதி செயற்பட வேண்டும்'' என்று கூறினார்

கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, தனிநாயகம் அடிகள், ஜனாதிபதியின், சர்வதேசப் பொருளாதார ஆலோசகர் திரு ராஜ் குமாரசாமி ஆகியோர் ஆசியுரை வழங்கினர்கள்.

பேரவையின் செயலாளர் திரு கே. கே. காசிப்பிள்ளை, திருமலை மாவட்டப் பிரதிநிதி திரு தவரத்தினம் உட்படபலர் உரையாற்றினார்கள்

இக்கூட்டத்தில் கல்விச் சேவை ஆணைக்குழு நியமித்ததற்காக அரசாங்கத்திற்குப் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டது நாட்டின் எல்லா அபிவிருத்திக்கும் அடிப்படையானது கல்வி அபிவிருத்தியாகும். அக்கல்வி உரிய முறையில் எமது பாரம்பரியங்களுக்கு ஏற்ப அபிவிருத்தியடையின் ஏனைய அபிவிருத்திகள் எல்லாம் மிகத் துரிதமாக அபிவிருத்தியடையும் ஆகவே நாட்டின் கல்வி அபிவிருத்தி விசயத்திற்கும்

(6-ம் பக்கம் பார்க்க)


ராஜா
யாழ் நகர்
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி - சாவித்திரி
நடித்த
காத்திருந்தகண்கள் (புதிய பிரதி)

REGAL (Jaffna)
Daily at 2-00, 4-30, 7-00 & 9-30p. m. only
Special Shows Saturday & Sunday 10-30, a. m.
MICHAEL YORK in
M. G. M. Presents
"LOGAN'S RUN"
Color-Thriller

குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும்
ஸ்ரீதர் போன் 7345 தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்) 10-30,2-30,6-15,9-45
ஜெய்சங்கர்-வாணிஸ்ரீ-ஆதித்தன்-தங்கவேலு
நடித்த
காதல் படுத்தும்பாடு
[புத்தம் புதிய பிரதி]
ரி. ஆர். பாப்பாவின் இசை
உங்களை மகிழ்விக்கும் காதுக்கினிய கீதங்கள் - மயிர் கூச்செறியும் சண்டைக் காட்சிகள்-வயிறுகுலுங்க சிரிக்க வைக்கும் நகைச்சுவை யாவும் நிறைந்த படம்.

வின்ஸர்
யாழ்ப்பாணம்
(தென்னிந்திய நடிகர்)
தினசரி 4 காட்சிகள்
காலை 10-30, பி.ப.2-30,
மாலை 6-30, இரவு 9-30
(கோமாளிகள் புகழ்)
எஸ். வி. சுப்பையா, ஜெயா, மீரா, ராம்தாஸ்
உதயகுமார்
நடித்த
மாமியார் வீடு
கதை-வசனம்-டைரக்ஷன்: கே. வெங்கட்

A Grand Release
SHANTHI JAFFNA PHONE 7642
Daily 10-30, 2-30, 4-45, 7-00, 9-30 p.m
The one thing people hate more than a Cop Killer...
Is the lawyer who gets him off
M. G. M presents DEAN MARTIN in
MR. RICCO
Color - Scope
Another Action Packed Movie!
Don't Miss This !!

மனோகரா தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
(யாழ். நகர்)
N. T. ராமாராவ் — சரோஜாதேவி
சீதாராம கல்யாணம்
(புதிய பிரதி)
(சிறந்த புராணப் படம்)

ராணி தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
(யாழ். நகர்) ஜெய்சங்கர்-கே. ஆர். விஜயா
நாகேஷ் நடித்த
பட்டணத்தில் பூதம்
(புதிய பிரதி)

வெலிங்டன் தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்) சிவாஜி-வாணிஸ்ரீ
குலமா குணமா

லிடோ போன் 7698 தினசரி 4 காட்சிகள்
(யாழ்நகர்)
அன்பு எங்கே?
(புதிய பிரதி)

நாகம்ஸ் (கல்லுண்டாய்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
எம். ஜி ஆர்-ஈ. வி. சரோஜா
கொடுத்து வைத்தவள்

வெஸ்லி
(காங்கேசன்துறை)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
நாகேஷ்-கே. ஆர். விஜயா
நாணல்

RIO Jaffna Phone: 7607
Daily 4 Shows
Sugeska
From 18-9-79
Grand Release
ELEPHANT CALLED SLOWLY

